# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

2012பிறந்தவர்கள்

**பின்வரும் 10 குறள்களையும் ஒப்பித்தல் வேண்டும். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.**

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் (குறள் 71)
புன்கணீர் பூசல் தரும்.

**அன்பிற்கும் கூடப் பிறர் அறியாமல் தன்னை மூடி வைக்கும் கதவு உண்டோ? இல்லை. தம்மால் அன்பு செய்யப்பட்டவரின் துன்பத்தைக் காணும்போது வடியும் கண்ணீரே அன்பு உள்ளத்தைக் காட்டிவிடும்.**

2. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம் (குறள் 411)
செல்வத்து ளெல்லாந் தலை.

**செவியால் கேட்டுப் பெறும் கல்வியறிவு ஆகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வம் ஆகும்; அதுவே மற்ற எல்லாச் செல்வங்களிலும் முதன்மையானதாகும்.**

3. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் (குறள் 101)
வானகமும் ஆற்றல் அரிது.

**ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாத போதும், அவர் நமக்கு உதவினால், அதற்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகயும் கொடுத்தாலும் சமம் ஆகாது.**

4. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (குறள் 948)

**நோயின் தன்மையையும், அதற்குக் காரணமான மூலத்தையும் ஆராய்ந்து, அதனைத் தீர்க்கும் மருந்தின் வழியையும் ஆராய்ந்து மருத்துவம் செய்ய வேண்டும்.**

5. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (குறள் 104)

**உதவியின் பயனை அறிந்தவர்கள் தினை அளவு சிறிய உதவியைச் செய்தாலும், அதனைப் பனை அளவு பெரிதாக மதித்துப் போற்றுவர்.**

2012பிறந்தவர்கள்

6. அறங்கூறா னல்ல செயினும் ஒருவன் (குறள் 181)
புறங்கூறா னென்றல் இனிது.
**அறமான செயல்களைச் செய்யாவிட்டாலும், பிறரைப் பற்றிப் புறம் கூறாமல் இருப்பதே மிகவும் நல்லதாகும்.**

7. தீயவை தீய பயத்தலான் தீயவை (குறள் 202)
தீயினும் அஞ்சப் படும்.
**தீமையான செயல்கள் தொடர்ந்து தீமையான விளைவுகளையே தருமாதலால், தீய செயல்களைத் தீயைக் காட்டிலும் கொடியதாகக் கருதி அஞ்ச வேண்டும்.**

8. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் (குறள் 291)
தீமை இல்லாத சொலல்.
**உண்மை எனப்படுவது எதுவென்றால், யாரிடமும் எத்தகைய தீமையும் இல்லாத சொற்களைச் சொல்வதாகும்.**

9. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் (குறள்322)
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

**தான் பெற்றதை மற்றவருடன் பகுத்துண்டு, பல உயிர்களையும் பாதுகாப்பதையே அறநூல் தொகுத்த நெறிகளுள் தலையானது.**

10. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில். (குறள் 621)
**துன்பம் வரும்போது மனம் தளர்ந்து கலங்காமல் புன்னகையுடன் அதனை எதிர்கொள்ள வேண்டும்; அந்தத் துன்பத்தையே எதிர்கொண்டு வெல்ல அதுவே வழியாகும்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.